1995 மே 3]

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சிறிய மாவட்டங்கள் மற்றும் வேளாண்மைப் பல்கலைக் கழகம், வேளாண் கல்லூரி மற்றும் மத்திய அரசு விவசாய பயிற்சி மையங்கள் உள்ள மாவட்டங்களைத் தவிர எல்லா மாவட்டங்களுக்கும், மாவட்டத்திற்கு ஒரு பயிற்சி மையம் இருககிறது. எனவே, திருச்சி மாவட்டத்திலே லால்குடியில் பயிற்சி மையம் இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. அந்த மையம் திருச்சி மாவட்டத்திலே இருக்கின்ற எல்லா விவசாயிகளுக்கும் தொழில்நுட்பங்களை பகிர்ந்தளித்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற மானியக் கோரிக்கையிலும் சரி, இந்தக் கோரிக்கையிலும் வேளாண்மை பயிற்சி மகளிர் பள்ளிகளையெல்லாம் அமைக்க கருத்துரு இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, உழவர் விவசாய பயிற்சி மையம் அமைப்பதற்கு சாத்தியகூறு இல்லையென்றாலும், அந்தப் பகுதியில் விவசாயிகள் நலன் கருதி, பெண்களும் விவசாயத்திலே அதிகமாக ஈடுபடுகின்ற காரணத்தினால், மகளிர் பயிற்சி மையமானது தொட்டியம் தொகுதியில் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பெண்களுக்கு வேளாண்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் தொட்டியம் பகுதியில் விவசாய பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 528, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

528—

வாய்ஸ் ஸ்கிராம்பலர் கருவிக்குத் தடை விதித்தல்

**11287—டாக்டர் அ. ஸ்ரீதரன்:*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*1995 மே 3*

(அ) எல்காட் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் வாய்ஸ் ஸ்கிராம்பலர் என்ற கருவியை பயன்படுத்த இந்தியாவில் தடைவிதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இக்கருவி என்ன நோக்கத்திற்காக தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வாய்ஸ் ஸ்கிராம்பலர் என்ற கருவியை பயன்படுத்த இந்தியாவில் தடை ஏதும் இல்லை.

(ஆ) இந்தக் கருவி எல்காட் நிறுவனத்தால் தயாரிக்கப்படவில்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, High Frequency Modulation என்று சொல்லக்கூடிய இந்த வாய்ஸ் ஸ்கிரேம்பலர் பல்வேறு நாடுகளிலிருந்து ஒரு நாட்டிற்கு அந்த டிரான்ஸ்மீட்டர் செலுத்துகிறபோது, சமூக விரோதிகளால், அதை இன்டர்செப்ட் செய்து நம்முடைய நாட்டின் ஒற்றுமைக்கும், இறையாண்மைக்கும் ஒரு சவாலாக இருக்கின்ற காரணத்தினால், இதை நவீனப்படுத்தவும், சீரமைப்பதற்கும், நம்முடைய தமிழக அரசின் சார்பில் ஏதேனும் புதிய நவீனத் திட்டங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ஸ் ஸ்கிரேம்பலர் என்ற கருவி தகவல் ஒலிபரப்பில் ஒரு முனையிலிருந்து செல்லும் குரலை திருப்பி மற்றொரு முனையில் பெற, ஒட்டுக்கேட்காத வகையில் இரகசியமாக தகவல்களை அனுப்ப உதவும் ஒரு கருவியாகும். இந்தியாவில் இந்தக் கருவியை பெரும்பாலும் பாதுகாப்புத் துறை மட்டுமே இப்போது பயன்படுத்துகிறது. இந்தக் கருவி மிகவும் உயர்ந்த தொழில்நுட்பம் கொண்டது. இந்தக் கருவியை பாதுகாப்புத் துறைக்கு இறக்குமதி செய்தோ அல்லது சொந்தமாக தயாரித்தோ பி.எச்.இ.எல். நிறுவனம் மாத்திரம் இப்போது வழங்கிக்கொண்டு வருகிறது. எல்காட் நிறுவனத்தைப் பொறுத்தவரை இது தயாரிக்கப்படவில்லை. சாதாரண தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு குறைந்த ஆற்றல் கொண்ட வாய்ஸ் ஸ்கிரேம்பலர்தான் தமிழ்நாடு எல்காட் நிறுவனம் தயாரித்து வருகிறது. சாதாரண குறைந்த ஆற்றல் கொண்டதாக எல்காட் நிறுவனத்தில்

1995 மே 3]

தயாரிக்கப்பட்டு வருகிறது. குறைந்த ஆற்றல் கொண்ட கருவியினுடைய தேவை எதிர்காலத்தில் அதிகரிக்கப்படுமானால், அப்போது எல்காட் நிறுவனம் இதை உற்பத்தி செய்து, அந்தச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அளிப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10–30

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அருமையான ஒரு விளக்கத்தைத் தந்தார்கள், என்றாலும் கூட இப்போது நிலவி வரும் இந்த விஞ்ஞான ரீதியில் பார்க்கிறபோது நாம் தயாரிக்கும் இந்தக் கருவிகளைக் காட்டிலும் சமூக விரோதிகள் வைத்திருக்கிற கருவிகளின் ஃப்ரீக்வன்சி என்பது வேறு. அதாவது நம்முடைய கருவிகளில் வேகத்தை அமுக்கி அவர்கள் வைத்திருக்கிற கருவிகளின் வேன்ஸ் மூலமாக நம்முடைய நாட்டின் ரகசியங்களை அறிவதற்கான வகையில் பவர்ஃபுல் இன்ஸ்ட்ருமென்ட்–ஆக வைத்திருப்பதால் இதை நாம் முழுமையாக ஆராய்ந்து, சமூக விரோதிகள் எக்காரணம் கொண்டும், எந்தக் கோணத்திலும் இந்த ஃப்ரீக்வன்சியை ஓவர்லுக் செய்யாத அளவுக்கு ஒரு கருவியைச் செய்தால் அது நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல; நம்முடைய நாட்டுக்கு மட்டுமல்ல, பிற நாடுகளுக்கும் அதை விற்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதால், எதிலும் புதுமை வேண்டும், எதிலும் புரட்சி வேண்டும் என்ற எண்ணம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில், நம்முடைய தமிழகம் எதிலும் முன்னோடியாக இருக்கிற காரணத்தால், வளர்ச்சிப் பாதையில் முன்னோடியாக இருக்கிற காரணத்தால், இப்படிப் பட்ட ஹை ஃப்ரீக்வன்சி மாடுலேஷன் உள்ள கருவிகளை நம்முடைய விஞ்ஞான வல்லுநர்களை வைத்துச் செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து எல்காட் நிறுவனத்தின் மூலமாகவோ அல்லது பெல் நிறுவனத்துடன் 'டை அப்' வைத்தோ செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் சமூக விரோதிகள் மேல்நாடுகளிலிருந்து அதாவது அதிகமான விஞ்ஞான வளர்ச்சி கொண்ட நாடுகளிலிருந்து இதுபோன்ற சாதனங்களைப் பெற்றுப் பயன்படுத்தி வருகிறார்கள். அதை அரசு தடுக்க வேண்டும் என்பது ஒன்று. அடுத்து இந்தக் கருவிகளைப் பாதுகாப்புத் துறைக்கு மட்டும் இப்போது நாம் பயன்படுத்தி வருகிறோம். காவல் துறையைப் பொறுத்தவரை கூட இதை இப்போது சரியாகப் பயன்படுத்துவதில்லை. காவல்துறை முழுக்க முழுக்க பயன்படுத்துகிற ஒரு நிலைமை

ஏற்படுகிறபோது எல்காட் நிறுவனம் உயர்ந்த தொழில் நுட்பங்களைக் கொண்ட இந்தக் கருவிகளைத் தயாரிக்கும் முயற்சியை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *529*, திரு. எஸ். ஆசைமணி, இருக்கையில் இல்லை.

வினா எண் *530*, திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் *531*, டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

531—

செய்தித்துறை விளம்பர முகவர் அமைப்பு ஏற்படுத்துதல்

10717*—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு செய்தித்துறை விளம்பர முகவர் அமைப்பு ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அரசினுடைய திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேருவதற்கும், பிராந்தியத் திட்டங்கள் அரசுக்குத் தெரியப்படுத்துவதற்கும் பத்திரிகைகள் மிகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே பத்திரிகைகள் இல்லை என்றால் மக்களுக்கு அரசினுடைய திட்டங்களும், பிராந்தியத் திட்டங்கள் அரசுக்கும் தெரிவதற்கு வாய்ப்பு இல்லை. ஒரு திட்டம் பேப்பரில் வருகிறபோதுதான் அதைக் கத்தரித்து துறைக்கு எடுத்துச் சென்று அந்தத் திட்டம் பற்றி அமைச்சர் பெருமக்களுக்குத் தெரியப்படுத்தப்படுகிறது. ஆகவே குடும்பநலத் திட்டத்திற்கென்று தனியாக ஒரு துறை இருப்பதைப்போல, ஒவ்வொரு பேருந்து நிலையங்களிலும் பேருந்துகளில் பயணிகள்